Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஸு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஸு சித்திரைமீ உ0உ வெள்ளிக்கிழமை (3 May. 1963) [இல-ரு]

## தத்துவவாதமும் மெய்யுணர்வும்

—————0—————

[ நவாலியூர் திரு. சோ. நடராசன் B. A. ]

மருந்துவேண் டில்இவை மந்திரங்கள் இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் களிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே,

துன்பங்களுக்கு மருந்து வேண்டுமா? இங்கேயிருக்கிறது; மந்திரம் வேண்டுமா? வேதமந்திரங்கள் இங்கேயுண்டு. விரும்பிக் கேட்கும் புண்ணியங்களா? இங்கே யுண்டு. எங்கே? தேவன் குடியில் எழுந்தருளியிருக்கும் பெரிய தவத்தோர் வழிபாடு செய்யும் எம்பெருமானுடைய திருக்கோலங்களை யடையுங்கள். இது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அருளிய திருவாக்கு.

அசையாத நம்பிக்கையிருந்தால்தான் தெய்வமென்பதோர் சித்தமுண்டாகும். தன்னிடம் ஈசன் இருக்கிறுரா என்பதைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறவர் ஆழ்ந்த நம்பிக்கையின் மூலந்தான் அவ்வாறு செய்ய முடியும். ஆனல் நம்பிக்கையைப் புறச்சாட்சியத்தால் நிரூபிக்க முடியாது. தயிருக்குள் வெண்ணெய் இருப்பதை எல்லாரும் அறிவர். அதைப்பற்றிப் பிரசங்கம் செய்வதால தயிரிலிருக்கும் வெண்ணெய் வெளியே திரண்டு வந்துவிடமாட்டாது. தயிரைக் கடைந்து எடுக்க வேண்டும். சமய தத்துவ வாதங்களினுல்மெய்யுணர்வு வரமாட்டாது. ஆண்டவன் இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதுறைகின்ருன் என்ற சித்தம் அறிவின் பயனுகவர மாட்டாது. அநன்னிய பக்தியினுலே தான் உண்டாகும். அந்தப்பக்தி உண்மை விசாரமுடையவர்க்கன்றி ஏனையோர்க்கு உண்டாகாது. வெறும் யுக்தி வாதத்தினுல பக்தி உண்டாகாது. பரமாத்மா, சீவாத்மா என்று தத்துவம் பேசிக்கொண்டிருந்தால் தத்துவ அறிவு உண்டாகலாம். ஆனல் மெய்ப்பொருள்விசாரமா, ஆண்டவனைப்பற்றிய உணர்ச்சியோ உண்டாகாது. தாயைக் காணுத குழந்தை தாயைக் காண விரும்பி விசாரமடைவது போல, ஆண்டவனை அடைய உள்ளததிலே ஒரு பெரு விருப்புண்டாகவேண்டும்.

கடையில் வாங்க வேண்டிய பொருள்களை ஒரு பட்டியலில் எழுதிக்கொண்டு போய் அவற்றை விலைக்கு வாங்கிக்கொள்கிருேம். அந்தச் சீட்டு வாங்கவேண்டிய பொருளை ஞாபகப் படுத்த மாத்திரமே உதவும் ஞாபகம் வந்தபிறகு அந்தப் பட்டியலால் என்ன பயன், சாத்திரங்களிலுலும் சொல்லப்படுபவை யெல்லாம் ஆண்டவனை அடைதற்குரிய வழியே. அந்த வழியை அறிந்தபின அவ்வழியில் நிற்கவேண்டியது கடமையாகின்றது. அதைச் செய்யாமல் பட்டியலை மனப்பாடஞ் செய்துகொண்டிருப்போமானுல் பொருள்கள் வீடுவந்து சேரமாட்டா.

வணங்கும் துறைகள் பலபல [ஆக்கி
மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலஆக்கி
அவை யவைதோ
றணங்கும் பலபல ஆக்கினின் [மூர்த்தி
பரப்பிவைத்தாய்
இணங்கு நின்னோரை யில்லாய் [நின்கண்
வேட்கை எழுவிப்பனே.

ஐயனே! மக்கள் உன்னை நினைந்து நினைந்து வணங்குவதற்கு எத்தனையோ மார்க்கங்களை உண்டாக்கினுய். அறிவு விகற்பத்தினுலே ஒன்ருேடு ஒன்று மாறுபடுவதுபோல அச்சமயங்கள் தோன்றினுலும் அந்தச் சமயங்கள் தோறும் தெய்வங்களை உண்டாக்கி உனது வடிவத்தையே எங்கணும் பரவச செய்து வைத்துள்ளாய். இணையிலலாத முழுமுதற் கடவுளே! உன்னிடத்திலேயே பக்தியை வளரச் செய்வேன். இது ஆழவார் திருவாககு.

விறகில் தீயினன்
பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்
உறவுகோல்நட்
டுணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக்
கடையமுன் னிற்குமே.

ஈசன் விறகிலே தீபோல மறைந்திருக்கின்ருன்

( தொடர்ச்சி 4-ம் பக்கம் )

### நற் சிந்தனை

—:—

அன்பு சிவமென்ற
ஆன்ருேர் திருவாக்கை
இன்பமுடன் போற்றி
இருப்பதுவு மெக்காலம்.

### பிராமணர் சங்க ஆண்டு விழா

மட்டக்களப்பு பிராமண சமூக சேவா சங்கத்தின் முதலாவது வருடாந்த விழா சித்திரை 28 (11-5-63) சனிக்கிழமை சங்கக் காரியாலயத்தையடுத்த கோட்டைமுனை வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அன்றுகாலை, விநாயகருக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேக விசேஷ ஆராதனைகள் நிகழும்.

அதையடுத்து, முற்பகல் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு ஆகியனவும் நண்பகல் போசனமும் நடைபெற்றபின், பிற்பகல்தொடக்கம் இரவு வரை பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

1 புஸ்தக வெளியீட்டுவிழா: மேற்படி சங்கத்தின் வேண்டுகோளின்படி, திருகோணமலை பிரம்மஸ்ரீ இ. கு. பூரணனந்தேஸ்வரக் குருக்கள் அவர்கள் தொகுத்து எழுதிய 'விக்னேஸ்வர பூஜா விதி'' என்னும் நூல் வெளியிடப்படும். இலங்கைச் சர்வ கலாசாலை சமஸ்கிருத விரிவுரையாளர் "கலாநிதி" பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் இலங்கைவானெலி இசைநிகழ்ச்சி அதிகாரி பிரமஸ்ரீ கே. எஸ். பாலசுப்பிரமணியஐயர், கொழும்பு பொன்னமபலவாணேஸ்வரர்கோவில் பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் உட்படப் பலர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வார்கள். சுழிபுரம் சங்கீத பூஷணம் பிரம்மஸ்ரீ டபிள்யு. முத்துக்குமாரசாமி சர்மா குழுவினரின் இசைக் கச்சேரியும், மீசாலை பிரம்மஸ்ரீ கா. சிவசுப்பிரமணியக் குருக்களின் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றென்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனுர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான்.

### யாழ்ப்பாணம்
## சைவபரிபாலன சபை
### 75-வது ஆண்டு நிறைவு விழா

இச்சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் குறிப்பின் வண்ணம் அவர்களுடைய சீடர்களாலும் அபிமானிகளாலும் (30-4-88) சர்வதாரி ஸு சித்திரை மாதம் 20-ந் திகதி மூலநட்சத்திரம் கூடிய திங்கட்கிழமையன்று வண்ணார்பண்ணையில் தாபிக்கப்பெற்று ஈழநாட்டில் சைவத் தொண்டும் தமிழ்மொழித் தொண்டும் புரிந்து வருகின்றது. திருவருளை முன்னிட்டு இச்சபையினது 75-வது ஆண்டு நிறைவுவிழா 12-5-63 ஞாயிற்றுக்கிழமையன்று சபை நாவலர் மண்டபத்தில் கொண்டாடப்படும். 10-5-63-ல் வெளிவரும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் சபை சென்ற 75 ஆண்டுகளிலும் புரிந்த தொண்டுகள் சபையின் சரித்திரசம்பந்தமான கட்டுரைகள் கொண்டனவாக வெளிவரும்.

## 'சமயக் கட்டுரைகள்'
### நூல் வெளியீட்டு விழா

இவ்விழா இம்மாதம் இருபத்திரண்டாம் நாள் (5—5—63) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் மூன்ருள்உதவி வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி எம். எஸ். சி அவர்களின் தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.



பழநி, ஏ. அங்கப்பாபிள்ளை குழுவினரின் நாதஸ்வர இசையும் திரு. கே. பி. ஹரன் எம். ஏ, அவர்களின் வாழ்த்துரையும் நடைபெறும். திரு சி. உ சோமசேகரம் M. A. டக்டர். எஸ். சுப்பிரமணியம், பண்டிதா திரு. பொ. கிருஷ்ணபிள்ளை, வித்துவான் திரு. [illegible] குமாரன் பி. ஓ. எல், பண்டிதர். திரு. க. பொ. இரத்தினம், எம் ஏ, திரு கி. லக்ஷ்மணன் எம். ஏ., உட்படப் பலர்பங்குபற்றிச் சொற்பொழிவாற்றுவர்.

### சைவமே சமயம்

ஸ்ரீ லங்கா சைவாதீனத்தினதும், வேதாகம சைவ சித்தாந்த சபையினதும் கூட்டு ஆலோசனை விழா அராலி கிழக்கு, முத்துமாரி அம்மன் கோவிலில் 5-5-63 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வேதாகம பூஷணம் பிரமஸ்ரீ. கு. பாலசுந்தரக்குருக்கள B A Hons) Lond அவர்கள் தலைமையில் பல சைவப்பெரியார்கள் ஹரிஜனப்பிரவேச ஆலயங்களைப் பகிஷ்கரித்தல், வேதாந்தத் திறனும் சைவ சித்தாந்தம், எல்லாம் மதமே சைவமே சமயம் என்னும் பொருள்கள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

சித்திராப் பூரணை விரதத்தை முன்னிட்டு, எதிர்வரும் 8-5-63 புதன்கிழமை இந்துசாதனம் அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் வேலை நடைபெறுது. —அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
சோபகிருது ஷூ சித்திரை மீ உ௦உ வெள்ளிக்கிழமை

## தொழிலின் தூய்மை வழி நிற்போம்

உடம்பால் உழைத்துண்ணும் அன்பர்கள் உலகெங்கும் புதன்கிழமையன்று கோடிக் கணக்காகக் கூடிக் கொண்டாடினர்கள். உழைப்பின் எழிலை உள்ளத்தில் உணர்ந்து உவகை கொள்ளும் நன்னாள் இந்நாள். தொழிலின் தூய்மையையும் அதன் வளத்தையும் ஆராய்ந்து பெருமை பேசும் அருமையான பொன்னாள் இந்நாள்.

சாதி இரண்டொழிய வேறில்லை என்று ஒதி இட்டார், இடாதோர் என்று மனித குலத்தை வகுத்து அன்பின் எழுச்சியாகிய ஈகையின் பெருமையை எடுத்துரைத்த முன்னோர் ஊக்கமாய் வாழ்ந்து உழைத்து உலக வளத்தை ஆக்குகின்றவர்களை ஒருசாராராகவும், சோம்பித்திரிந்து நாட்டிற்கும் பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் பிறருக்கும் சுமையாகவிருந்து பொழுது அவமே போக்குகின்றவர்களை மறுசாராராகவும் வகுத்துக்காட்டியிருக்கின்றனர். எனவே தொழிலின் தூய்மையையும் எழிலையும் நினைவுக்கழைக்கும் நாளை வைகாசி ஆங்கில நாளேட்டில் முதலாவது தினமாகக் கொண்டாடும் பாரம்பரியம் பண்பாக வளர்ந்துவருவது பாராட்டுக்குரியது.

அரசியல் ஆதிக்கத்துக்கோ கட்சிகட்டும் கர்வத்துக்கோ இந்த நாளைப் பயன்படுத்தாது தொழில் இன்றேல் வளம் இல்லை என்ற உண்மையை மக்கள் அறிந்து சோம்பலைக் களைந்து தேசத்தை ஓம்பும் பணியிலே தூய தொழிலில் ஈடுபடும் நல்ல எண்ணத்தை உண்டுபண்ணுவது மனிதப் பண்பாகும்.

உழவுத்தொழில் முதலிய பல்வேறு தொழில்களை உளம் உழுதுண்ணும் தொழில் நலத்தைப் புகழ்ந்த பெரு நாவலர் அதற்குத் தனி இடம் கொடுத்து அதன் பின்சார ஏனையவை எல்லாம் நன்று என்றே கூறிப் போந்தனர். தொழில் இயக்கம் என்பதற்கு விபரீத விளக்கம் கூறி, அது ஒரு குறிப்பிட்ட சாரருக்கே உரியதென்று எல்லைபிட்டு, அதற்கு நேர் மாறாகவுள்ளவர் பொன்னும் பொருளும் பொலிந்து விளங்கும் நிதி மன்னர்கள் என்று சொல்வது பொருந்தாது. அவ்வாறானால் வறுமை தொழிலுக்குரிய குணமாகிவிடும். தொழில் செய்யும் குழுவினருக்கு நேர் மாறானவர்கள் சோம்பலாய் வீண்காலம் போக்குகின்றவர்கள். ஈழத்தின் வளத்துக்குத் தொழில் இயக்கம் பெருந்தொண்டாற்றும் வழிவகைகளை ஆராய்வது நன்று. உலகத்திலுள்ள ஏனைய நாடுகளின் அரசியற்கலகத்தில் இலங்கையரும் கலந்து கட்சிகட்டி கென்னடி கெடுக. குருச்சேவு குலவுக என்று கூறுவது பொருத்தமாகாது. புறநாடுகளின் கொள்கை அறத்தைப்பற்றி அறிவதிலும் பார்க்க எங்கள் நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்கும் தொழிலில் மக்களை உழைக்க ஊக்கப்படுத்துவது சாலச்சிறந்த பணியாகும்.

—

# மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

முற்றொடர் — 6.

### மாயாவாதம்

ஏகான்மவாதம் எனப்படும் மாயாவாதத்தை உபதேசித்தவர் சுக்கிரபகவான்; அசுரகுரு. இவ்வாறே ஒருசமயம் உலகாயதத்தை இந்திரனுக்கு உபதேசித்தவர் வியாழ பகவான்; தேவகுரு. தேவகுருவாகிய வியாழ பகவானே, சீடனாகிய தேவேந்திரனே உலகாயதமதத்தவரல்லர். அப்படியிருந்தும் உலகாயதம் போதிக்கப்பட்டது. இந்திரன் அரசர்களுக்கு அஞ்சி, அதனால் அரசியலில் வெறுப்புக் கொண்டு துறவை மேற்கொண்டான். கதையிலே நரிக்குத் திராட்சை புளித்தது சிறுவரும் அறிந்தது. நரிக்குப்போலவே சுவர்க்க அரசியல் இந்திரனுக்கு எப்பொழுதும் எட்டாதமையாற் புளித்தது. அதனால் துறவைமேற்கொண்டான். இத்துறவு போலித்துறவு; நில்லாது. மனைவியோடு கோபித்துக்கொண்டு, துறவியாய்க் கதிர்காமத்தில் சாதுக்கள் வரிசையில் இருந்த ஒருவன், பின் பிள்ளைகளை நினைத்து மீண்டு வந்துவிட்டான். சாதுநிலை தளர்ந்து சூனியமாய்ப் போய்விட்டது. இப்படியான துறவுநிலைதான் இந்திரனுக்கு ஒருநாள் வந்தது. அதனைக்கண்ட தேவகுரு, அப்படித்துறவைப் போக்குவதற்காக ஒரு தந்திரஞ் செய்தார்.

"ஆண்டோர் பேரின்ப
முண்டென்பர் அதனை
யாரறிவார்"

என்று தொடங்கிச் சிற்றின்ப இரகசியங்களை விரித்து, காமச்சுவையை மிகுத்து உபதேசித்தார். இந்திரனின் பொய்த்துறவு கழன்றது. அவன் காமபரவசனாய் இந்திராணியின் காலடியில் வீழ்ந்து, 'பிராணநாயகியே, இனி நீ உன் காலாலே ஒரு கீறுகீறிவிடு நீ இட்ட கீற்றையும் கடவேன் ஒருக்காலும்,' என்றான் இந்திரன். இந்திரன் துறவைக்கண்டு அழுத இந்திராணி வியாழபகவானின் காலடியில் வீழ்ந்து வணங்கி நன்றி தெரிவித்தாள். தந்திரம் பலித்தது கண்டு சிரித்துக்கொண்டு சென்றார் வியாழபகவான். தந்திரம், உபாயம் இது நூற்றந்திரம் எனவும்படும். நூற்றந்திரமாவது நூல் வழியில் நிறுத்துவதற்குச் செய்யும் உபாயம். இந்த உலகாயத தந்திரத்தால் இந்திரன் உய்ந்தான்.

'இந்திர புரோகிதனியமபு மொரு நூலின் தந்திரம்' என்று அழகுறச் செப்புகின்றது சிவஞானசித்தியார். தந்திரம் நூற்புணர்ப்பு எனவும்படும். ஈண்டு நூல் வழியில் இந்திரனை நிறுத்த உபதேசித்த நூற்புணர்ப்பு உலகாயதம்.

ஒருநாள் இந்திர குமாரனை அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்ததும் நூற்புணர்ப்பே. கொலை பாவம். அது புரியேன் என்று அருச்சுனன் பெரிய ஆத்மஞானம் பேசினான். 'கொன்று குவி'யென்றான் குருவான கண்ணன். 'கொல்லச் செப்பும் வார்த்தை' கண்ணனின் உபதேசம் என்கின்றது சித்தியார். ஞானத்துக்கு நிமித்தம் கன்மம். கன்மத்துக்கு மூலந்தன்மம், தன்மம்-தருமம். தருமம் தெரிந்த தர்மமூர்த்தி கண்ணன். அவன் தன் சீடனின் மனநிலையை உணர்ந்து ஞானத்துக்கு உபகாரமான தருமநெறியில் அவனை நிறுத்தினான்; அவன் நின்றான். மற்றொரு பிறப்பில் அருச்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### நாவலர் கட்டுரைப் போட்டி

சைவபரிபாலன சபை 75-ஆவது ஆண்டு விழாச் சிறப்பிதழாக வெளிவரும் (10-5-63) அடுத்த இந்துசாதனத்தில் நாவலர் கட்டுரைப் போட்டி [illegible]

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

( முற்றொடர் - 16 )

### அம்பலத்தான் கூத்தின்பயன் அந்தமிலின்பமாம்

மோனந் மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும் — ஆனநதம்
மோண்டருந்தி நின்றாடல் காணுமருள் மூர்த்தியாக்
கோண்டதிரு வம்பலத்தான் கூத்து. 37.

கொ—கூ: அந்த(ம்) மோனமாமுனிவர் மும்மலத்தை மோசித்து, 'தான்' அந்தம் ஆன இடத்தே தங்கியிடும் ஆனந்தம் மொண்டு அருந்தி நின்று, ஆடல் காணும் (அது தான்) அருள் மூர்த்தியா(க)க் கொண்ட திரு அம்பலத்தான் கூத்து (முறைமையாம்).

ப—ரை; அந்தம் மோன மா முனிவர் மும்மலத்தை மோசித்து - முடிவான மௌன தவமுடைய சிறந்த ஞானிகள் அவனருளாலே மும்மலங்களையும் நீக்கி, 'தான்' அந்தம் ஆன இடத்தே தங்கியிடும் - 'நான் பிரமம்' என்னும் ஆன்ம போதம் முடிவடைந்த காலத்திலே தோன்றி நிலைத்து நிற்கின்ற, ஆனந்தம் மொண்டு அருந்தி நின்று ஆடல காணும் (அதுதான்) - ஆனந்த வெள்ளத்தை முகந்து கொண்டு அதனை அனுபவித்திருத்தலே பயனாகத் திருநடனத்தைத் தரிசிப்பதுதான், அருள் மூர்த்தியா(க)க் கொண்ட திரு அம்பலத்தான் கூத்து - எல்லா ஆன்மாக்களும் ஈடேற வேண்டும் என இயல்பாக எழுகின்ற கருணையே திருமேனியாகக் கொண்ட திருவம்பல முடையானது திருநடன முறைமையாகும்.

இதனால், அவனருளே பற்றுக்கோடாக மும்மலம் நீங்கி ஆன்மபோதமுமகன்ற நிலையிலேயே ஆன்மா பக்குவியாகுமென்பதும், அப்பக்குவ நிலையிலே உளதாகும் பதிஞானத்தினாலேயே ஆனந்தம் மொண்டருந்தலாகிய பயன் பெறற்பால தென்பதும் வலியுறுத்தப்பெற்றன.

பொழிப்பு: மௌன விரதமுடைய முனிவர்கள் மும்மலங்களையும் நீக்கி, ஆன்மபோதம் அதன்ற நிலையில் நிலைத்து நிற்பதாகிய பேரானந்தத்தை முகந்து அனுபவித்து இருத்தலே பயனாகத் திருநடனத்தைத் தரிசிப்பதுதான், கருணையே உருவமான திருவம்பலமுடையானின் திருநடன முறைமையாகும்.

### பிரான் நடனம் பேணுவார்க்குப் பிறப்பில்லை

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா வொருவன் — வரைமகள்தான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு. 38.

கொ—கூ: உரை உணர்வுக்கு எட்டா ஒருவன், மிகு பஞ்சாக்கரத்தால் கருணை உருக்கொண்டு, பரை இடமா(க) நின்று, வரை மகள்தான் காணும்படியே ஆடல் (செய்வதைப்) பேணும் அவர்க்குப் பிறப்பு உண்டோ? (இல்லை).

ப—ரை: உரை உணர்வுக்கு எட்டா ஒருவன் - வாக்கு மனாதீதனாகிய ஒப்பற்ற இறைவன், மிகு பஞ்சாக்கரத்தால் கருணை உருக்கொண்டு - மேன்மைமிக்க ஸ்ரீ பஞ்சாக்கரத்தினாலே கருணையே திருமேனியாகக்கொண்டு, பரை இடமா நின்று - பராசத்தியாகிய பொன்னம்பலமே இடமாக நின்று, வரை மகள்தான் காணும்படியே - மலையரையன் மகளாகிய உமையம்மை காணும்படி, ஆடல் - திருநடனஞ் செய்தருளுவதை, பேணுமவர்க்குப் பிறப்பு உண்டோ - விரும்பி(த் தரிசித்து) வாழுகின்றவர்களுக்குத் தொடர்ந்து வருவதாகிய பிறவித்துன்பம் இல்லையாம்.

'உரையுணர்வுக் கெட்டா வொருவன் மிகு பஞ்சாக்கரத்தால் வரைமகள் தான்பாதி பரையிடமாக் காணும் படியே" என்பதும் பாடம். ஆயின், "உரை உணர்வுக்கு எட்டா ஒருவன், மிகு பஞ்சாக்கரத்தால் வரைமகள் பாதி தான் பாதி (ஆகக்) கருணை உருக்கொண்டு, பரை இடமாக நின்று, (அவ்)வரைமகள் காணும்படியே ஆடல் செய்வதைப் பேணுமவர்க்குப் பிறப்பு உண்டோ? எனக்கொண்டு கூட்டிப் பொருள் உரைக்க.

பொழிப்பு: இறைவன் ஸ்ரீ பஞ்சாக்கக்கரத்தினாலே கருணையே திருமேனியாகக் கொண்டு, பொன்னம்பலமே இடமாக நின்று உமையம்மை காணும்படி திருநடனஞ் செய்தருளுவான். அத்திருநடனத்தை விரும்பித் தரிசித்து வாழுகின்றவர்களுக்குப் பிறவித்துன்பம் இல்லை.

### மாணாக்கனின் ஐய வினா
### அஞ்செழுத்து அழியும் எழுத்தாமோ ?

நாதாந்த நாடகத்தை நன்றா யருள்செய்தீர்
ஓதீ ரெழுத்தஞ்சு முள்ளபடி — தீதறவே
அஞ்செழுத்தீ தாகி லழியுமெழுத் தாய்விடுமோ
தஞ்ச வருட்குருவே சாற்று. 39.

கொ—கூ தஞ்ச அருட்குருவே, நாத அந்த நாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்; அஞ்சு எழுத்து ஈது ஆகில், அழியும் எழுத்தாய்விடுமோ?, ஓதீர்; தீது அறவே எழுத்து அஞ்சும் உள்ளபடி சாற்று.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவாத துச்சகோளரி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சுனன் கண்ணப்பர் ஆனன். வேட்டை மேற்கொண்டு காட்டுக்குச் சென்றவர். திடீரென்று முற்றொடர்பினுல் நிஷ்காமராய்க் காளத்தியப்பரைப் பிரிய முடியாதவராயினர். செய்யா திருக்கமாட்டாமையால் செயலைச் செய்வது நிஷ்காமியம். கருவி கரணங்கள் மற்றொன்றால் செலுத்தப்படுவதொரு நிலை நிஷ்காமிய நிலை. இந்நிலை ஞானத்துக்கு வாய்தல் இந்த ஞான வாய்தலை நோக்கி, அன்னையையும் அத்தனையும் நீத்துத் தம்மை மறந்து நடக்கின்றார் கண்ணப்பர். அந்நிலையில் கண்ணப்பரை ஒரு கண்ணன் வந்து தடுத்து, "கண்ணப்பா உடும்புக்குத் தொடுபாணம், நீ வந்த அலுவல் அது" என்று உபதேசிக்கவில்லை கண்ணப்ப நிலை வருவதற்குத்தான், அன்று பாரதமுனையில் "கொல்" என்று உபதேசித்தான் கண்ணன். கண்ணன் கொலையாகிரியனுமல்லன்; அருச்சுனன் கொலைஞனுமல்லன் கொல்லுதல் அன்று செய்ய வேண்டியதொரு தருமமாயிருந்தது.

இந்திரகுமாரனுக்குக் கண்ணனும், இந்திரனுக்கு வியாழபகவானும் உபதேசித்ததுபோலவே சூரபன்மனுக்கும் சுக்கிரபகவான் உபதேசித்தார். உபதேசித்த குருவுக்கு ஏகான்மவாத மாயாவாதம் உடன்பாடானதன்று. ஆனல் உபதேசித்தார். வியாழபகவானும் சுக்கிர பகவானும் கிருஷ்ண பகவான் போலவே தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள்; தெய்வ அநுட்டானங்கள்; நவக்கிர வரிசையில் முக்கியமானவர்கள்; ஆத்மாக்களுக்குப் பிராரத்தத்தை ஊட்டுபவர்கள்; திருவருளின் கருத்தறிந்து உத்தியோகம்நடத்துபவர்கள்.

உலகாயத உபதேசம் நடந்த அடுத்தநாளே இந்த உபதேசம் நடந்தது ஏன் என்பது இந்திரனுக்குத் தெரியும். அவன் அம்மதத்தை மேற்கொள்ளவில்லை. ஆனல் அந்த மதத்தை மரண பரியந்தம் அநுட்டிக்க வேண்டிய ஆத்மாக்கள் உண்டு. வேதத்துக்குப் புறம்பான அம்மதத்தை அநுட்டிக்கவேண்டிய நிலையெய்திய அந்த ஆன்மாக்களையும் பேதித்து நம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளை கைவிடுவாளல்லள். ஒரு மதமுமில்லாத புல் பூண்டு புலி கரடிகளையும் நடத்துபவள் அவளேயன்றோ.

வியாழ பகவான் உலகாயதம் போதித்த அத்தினத்திலாவது இந்திரனுக்கு அஃது இனித்திருக்கும். சிங்கமுகாசுரனுக்குச் சுக்கிரனுபதேசித்த ஏகான்மவாதமாகிய மாயாவாத உபதேசம் அவர் உபதேசித்த போதே இனிக்கவில்லை. அவன் இருதயத்தில் தந்தையாகிய காசிபர் முதலில் உபதேசித்த வேதாந்தத் தெளிவு ஆகிய சைவசித்தாந்த உபதேசமே குடியிருந்தது. சுக்கிரனுபதேசத்தைத் ஒருபக்கக் காதுகளாற் கேட்டு மறுபக்கக் காதுகளால்விட்டுவிட்டான். ஆனல் அவ்வுபதேசம் யாருக்கு இனிக்க வேண்டுமோ அவனுக்கு மிகநீண்டகாலம் இனித்தது. ஏன் இனித்ததென்பது தெய்வ இரகசியம். "கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைத்" தரிசிக்கும்வரை சூரபன்மன் ஏகான்மவாதியாயேயிருந்தான். ஒரு நாள் அவன் தாயாகிய மாயைகூட அவன் மேற்கொண்டமாயாவாதத்தைப் பரிகாசஞ் செய்தாள். அவள் 'விடிவாம் அளவும் விளக்கு' ஆகியிருந்தவளன்றோ!

(தொடரும்)

அணிந்துரை அரங்கம்

பொது அறிவு வினுவிடை

1000 கேள்விகளும் விடைகளும்

விலை ரூபா: 1-20

ஆசிரியர்: ந,சி. கந்தையாபிள்ளை

புவியியல், சரித்திரம், அரசியல், இலக்கியம், கலை, சமயம், அறிவியல் முதலிய சகல துறைகளிலும் பொதுவாக மனிதன் அறிந்திருக்க வேண்டிய அத்தனை விடயங்களையுமன்றிச் சிறப்பான பல தகவல்களையும், உண்மைகளையும், சுருக்கமாகவும், தெளிவாகவும் ஆயிரம் வினுவிடைகளில் ஆக்கித்தந்துள்ள திரு. ந. சி. கந்தையாபிள்ளை அவர்களுக்கு தமிழுலகம் - சிறப்பாக மாணவ உலகம் மிகவும் கடமைப்பாடுடையது.

—:—

## கட்டுரைப்போட்டி

விஷயம்:- சைவாசாரம் சிறந்த சுகாதாரம்: ரூபா 15, 10, 5 பெறுமதியான 3 பரிசுகள் வெளிநாட்டு அன்பர்களின் வசதிக்காக முடிவு நாள் சோபகிருது ஆடி முடிவு வரை நீடிக்கப்பட்டுள்ளது. கட்டுரை எத்தனை பக்கங்களும் எழுதலாம், கட்டுரை எழுதும் கடதாசிகளில் பெயர் விலாசம் முதலியன இடம் பெறக்கூடாது, தனியே ஒரு கடதாசியில் கட்டுரையாளரின் கல்வித்தரம் - எழுத்துத் துறைஅநுபவம்-இக்கட்டுரை எழுத உதவிய நூல்கள் - உதவியவர்களின் பெயர்கள்பற்றிய விபரங்களை, அவரது முழுப்பெயர் தபால் விலாசங்களுடன் எழுதி இணைத்தனுப்ப வேண்டும். கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா, அதற்குச் சரியான நகல் வைத்திருங்கள்.

[போட்டி நடாத்துவோரின் இவ்விபரங்களும் வெளியான 'மாத வெளியீடு' வேண்டுவோர் இரண்டு புதிய 10 சத தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.]

'கட்டுரை" நிர்வாகி மேற்பார்த்து, மேலை புலோலி நூல்நிலையம், பருத்தித்துறை (இலங்கை) என்று அனுப்பி வையுங்கள்.

## பிரார்த்தனை

சிவனே! மங்களரூப! எல்லா உலகங்களுக்கும் சகலருக்கும் துணையானவரே! ஆனந்தமே வடிவாக உடையவரே! உமா தேவியாருடன் கூடிய உமக்கு பணிவிடை புரிய நற்குணமுள்ள புத்தி என்னும் என் மகப் பெண்வண உமக்களிக்கிறேன். எனது மனமென்னும் வீட்டில் எப்பொழுதும் நீர் வாசம் செய்ய வேண்டும்

- சிவாநந்த லஹரி.

## திருக்கேதீச்சரத்தில் சைவமாநாடு

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை, அ இ. சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம், கீரிமலை இந்துசமய விருத்திச்சபை, திருக்குறிப்புத் தொண்டர் சபை ஆகியவற்றின் ஆதரவில் சென்ற திங்கட்கிழமை திருக்கேதீச்சரத்தில் சைவமாநாடு ஒன்று நடைபெற்றது. திரு. கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சரப் பணியைப்பற்றி விளக்கமாய் எடுத்துரைத்தனர். சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத் தலைவர் வித்துவான் செல்லையா, சைவமத்தியமகாசபைச் செயலாளர் திரு. சண்முகரத்தினம் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை உட்படப் பலர் பேசினர்.

### இசைக்கலைத் தேர்வு

=O=

வடஇலங்கைச்சங்கீதசபையின் இவ்வாண்டுத்தேர்வுகள் யாழ்ப்பாணம், கொழும்பு திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆவணி மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும், விண்ணப்பங்கள் 31-5-63 வரை ஏற்கப்படும் என்றும் பிந்திய விண்ணப்பங்கள் 10-6 63 வரை ஏற்கப்படும் என்றும், விண்ணப்பங்கள் அதற்குரிய மாதிரிப் பத்திரத்தில்: தலைவர், வட இலங்கைச் சங்கீதசபை, வித்தியா கந்தோர், யாழ்ப்பாணம் என்றவிலாசத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும், பணத்துடன் நேரில் கொண்டுவரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா என்றும் அறியப்படுகிறது. மிகுதி விபரங்களை மேற்படி சங்கத்தலைவரின் முகவரியில் அறியலாம்,

## புதிய குடியேற்றம்

வவனிக்குளம், அக்கராயன் குளம், கரியாலை நாகபடுவான் ஆகிய இடங்களில் குடியேறுவதற்குக் காணிகோரும் விண்ணப்பப் பத்திரங்களை பொதுக் காரியதரிசி, அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம், உருத்திரபுரம் என்ற விலாசத்தில் இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம். 1963 மே 20-ம் திகதிக்கு முன் காணிபெறவிரும்புபவர்கள் வடமாகாண அதிபருக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

## இலவச சமயதீட்சை

சித்திரை மாதம் 22-ந்திகதி (5-5-63) காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி அரசடிப்பிள்ளையார் கோவிலில் இளங்கோ மன்ற ஆதரவில் அ. இ. பொ, சே. சங்கத்தாரால் இலவச தீட்சை செய்விக்கப்படும். [illegible] ஆரம்பித்து வைப்பார்கள்.

## உண்மை விளக்கம்

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

ப—ரை: தஞ்ச அருட்குருவே - எனக்குப் புகலிடமாயிருக்கின்ற பெருங்கருணையுடைய ஞானதேசிகரே, நாத அந்த நாடகத்தை நன்றாய் அருள் செய்தீர் - நாத முடிவாய் இருக்கின்ற திருநடன முறைமையை அடியேனுக்கு நன்றாக அருளிச் செய்தீர்கள்; அஞ்செழுத்து ஈது ஆகில் - இறைவன் திருமேனியாகக் கொண்டருளுகின்ற பஞ்சாக்கரம் எழுத்துக்களிலே ஒன்றாயிருக்குமாயின், அழியும் எழுத்தாய் விடுமோ?- அழியும் தன்மையுடைய எழுத்தாகுமோ?, ஓதிர்-சொலுவீராக; தீத அறவே எழுத்து அஞ்சும் உள்ளபடி சாற்று - (மேலும் அடியேனது மயக்கமாகிய குற்றம் நீங்கும்படிக்குப் பஞ்சாக்கரத்தின் உண்மை இருந்தபடி எது வென்பதனை அருளிச் செய்வீராக,

பொழிப்பு: ஞானதேசிகரே, திருநடன முறைமையை அருளிச் செய்தீர்; ஸ்ரீ பஞ்சாக்கரம் எழுத்துக்களில் ஒன்றாயிருக்குமானல் அவ்வெழுத்துக்களே போல அழியும் எழுத்தாய் விடுமோ? மேலும் (எனது மயக்கம் அகலும்படிக்கு) திருவைந்தெழுத்துண்மை இருந்த முறைமையை அருளிச் செய்வீராக.

### பொருள் அழியாப் பஞ்சாக்கரத்தின் உட்பொருள்

உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும் பொருள்தான் சலியாது — மற்றதுகேள்
ஈசனரு ளாவி யெழிலார் திரோதமலம்
ஆசிலெழுத் தஞ்சினடை வாம் 40.

கொ—கூ: ஓதுங்கால், பாடைகளில் உற்ற எழுத்துக்களின் குறி அழியும்; பொருள் தான் சற்றும் சலியாது; மறறதுகேள், ஈசன் அருள் ஆவி எழில் ஆர் திரோதம் மலம் ஐந்தும் ஆசு இல் எழுத்து அஞ்சின் அடைவு ஆம்.

ப—ரை: ஓதுங்கால் - பஞ்சாக்கரத்தின் உண்மையைச் சொல்லுமிடத்து, பாடைகளில் உற்ற குறி அழியும்- பல்வேறு மொழிகளிலும் பொருந்திய எழுத்துக்களின குறிகள் தாம் அழியும் இயல்பினை உடையனவாம்; பொருள் தான் சற்றும் சலியாது - (ஆனல்) அவற்றல் அறியக்கிடந்த பொருள் சற்றேனும் அழியாது; மற்றது கேள் - (ஆதலால்) அப்பஞ்சாக்கரத்தின் உண்மைப் பொருளியல்பை உரைக்கின்றேம் கேட்பாயாக, ஈசன் அருள் ஆவி எழில் ஆர் திரோதம் மலம் - சிவன், அருள் (சத்தி), ஆன்மா, அழகு (நன்மை) பொருந்திய திரோதான சத்தி, (ஆணவம் கன்மம் மாயையாகிய மூம்)மலம் என்னும் ஐந்தும், ஆசு இல் அஞ்சு எழுத்தின் அடைவு ஆம் - குற்றமற்ற ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருண்முறைமையாம்.

சிகாராதி பஞ்சாக்கரத்தில் 'சி' - சிவத்தையும், 'வ' - அருட்சத்தியையும், 'ய' - ஆன்மாவையும், 'ந' - திரோதான சத்தியையும், 'ம' - மும்மலங்களையும் குறிப்பன. இப்பஞ்சாக்கர அமைப்பில், 'ய' ஆகிய ஆன்மாவைப் பெத்த நிலைப்படுத்தும் 'ந' 'ம' - என்பன ஒருபுறமாக நின்று ஊன நடனத்தையும், முத்திநிலைப்படுத்துவனவாகிய 'சி' 'வ' - என்பன மற்றொரு புறமாக நின்று ஞான நடனத்தையும் விளக்கும். எழுத்தஞ்சின் அடைவு இங்ஙனமாதலைத் திருவருட்பயனுசிரியர் "ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம், ஞானநடம் தானடுவே நாடு" என்ப.

பொழிப்பு: மொழிகளிலுள்ள எழுத்துக்களின் குறி அழியுமேயன்றிப் பொருள் அழியாது அங்ஙனம் பொருள் சற்றேனும் அழியாது நின்ற பஞ்சாக்கரத்தின் உட்பொருள் சிவம அருட்சத்தி ஆன்மா திரோதானசத்தி மலம் என்னும் ஐந்துமாம.

—தொடரும்.

COMMISSION SALE

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல. 7331
தொண்டமாறு சின்னையா கிருஷ்ணசாமி -வழக்காளி.
எதிராக:
கெருடாவில் முருகன் ஆண்டி -எதிரி.

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1963-ம் ஆ வைகாசி மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னும் விபரிக்கப்படும் ஆதனங்களிடமாக விருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று.

1. உடுப்பிட்டியிறை "கீரியன் செம்பாடு" ஷை கலட்டி நிலப் பரப்பு 27 இதில் மேற்குப் புறமாக $\frac{1}{4}$ பங்குககு ஆட்சிப்படிநிலப் பரப்பு $6\frac{3}{4}$ இதற்கெல்லை கிழக்கு குட்டிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனும், வடக்கு ஒழுங்கை மேற்கு ஆறுமுகம் கந்தசாமிக்கும் மறுபேருககுமுடையவாதனம். தெற்கு சுவாமிநாதர் ஐயாத்துரைக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகள் யாவும்.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று தம்பாலையிறை ஓர் பொதுப்பெருங்காடு 109-ம் இலக்கங் கொண்டது. இதன் விசாலம் ஏக்கர் 8 றூட் 1 பேட்சு 3. இதற்கெல்லை வடகிழக்கு சின்னையா இராசையாவுக்குடையவாதனம். வடமேற்கு கடற்கரை, தென் மேற்கு கீழே சொல்லப்படும் 3ம் காணி. தென் கிழக்கு வல்வெட்டி வயித்தீஸ்வரசுவாமி கோயிலுக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் பனைகள் வடலிகள் நாவல் மரம், புளியமரம் அடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 38.

3. ஷை யிறை, பீரானகாடு காணி T. P. 183916-ம் இலக்கங்கொண்டது. இதன் விசாலம் றூட் 2 பேட்சு 8. எல்லை கிழக்கு T. P. 61360-ம் இலக்கம் கொண்ட காணி. மேற்கும் தெற்கும் T. P. 178403-ம் இலககங் கொண்ட காணி வடககு T. P. 57261-ம் இலககம் கொண்ட காணி. இவ்வெல்லைககுட்பட்ட நிலம் தென்னைகள் பனைகள் அடங்கலும்.

துரட்சிததொகை ரூபா 3675-00 இதில் ரூபா 2500-00 க்கு 19-2-1962 தொடக்கம் 14-6-1962 வரையும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும இதில் ரூபா 1600-00 கொடுபட்டது.

V. M. KANDASAMY,
Commissioner of sales & valuer.
வல்வெட்டித்துறை, 17-4-63.
M 22 3-5-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


# யாழ்ப்பாணத் தமிழ் அரசரும் தலைநகரும்

(முற்றொடர் -5)

செங்கடக நகரி

திரைமறைவில் தான் அம்பும் வில்லும் எடுத்து அமர்ந்திருந்த இரகசியத்தை அந்தகன் அறிந்து பாடிவிட்டானே என்று அரசன் அதிசயப்பட்டதோடு, சிலையேந்தியதற்கு ஏதுவைச் செப்பு என்றுங் கேட்டுவிட்டானே, உண்மையில் அவனைச் சோதிக்க வல்லவா நாம் அவ்வாறு செய்தோம் என்று எண்ணம் இட்டவனுயினுன். அப்பாலும் அரசன் ஒரு பெண் வடிவந்தாங்கி அத் திரை மறைவிலேயே இருந்தான். அப்பொழுது அவ்வந்தகன் அப்பெண்ணைத் திருமகள் அன்னபெண் என்று வர்ணித்துப் பாடினுன். (அப்பாடல் இப்பொழுது கிடைக்கவில்லை) அரசன் அவனைப் பற்றி மேலும் வியப்பில்

பண்டிதர் பொ, ஜகந்நாதன்

ஆழ்ந்துவிட்டான்; அந்தகனைப்பற்றி முன்னர் நாம் கேட்டவைக ளெல்லாம் அவன் அபாரமான சாமர்த்தியத்தில் ஒருபகுதிதான் என்றும் அறிந்ததோடு, அவன் இசைத்திறமையால் பாடியதால் இசைவல்லோன் என்றும், அப்பாடலையும் உடனுச்குடனே நிகழும சந்தர்ப்பத்திற் கேற்க இயறறிப் பாடுதலால் புலவன் என்றும், அங்ஙனம் பாடும் பாடற் பொருளும் காணமுடியாத திரைமறைவில் நிகழ்ந்ததான நிகழ்ச்சிப் பொருள்களாக, மறைவுப் பொருளாக இருத்தலால் புலவனன்றியும் அபாரமான ஞானதிருஷ்டியுடையவன் என்றும் விளங்கிக் கொண்டான். கவிஞன் பாடல்கள் அவன் உள்ளத்தைச் சுவீகரித்துக் கொண்டான. அந்தகன் தன்னை வென்றுவிட்டான் என்று அரசனே உணர்ந்து கொண்டான். அவ்வுணர்ச்சி அப்புலவனை நேரேயே பார்க்க வேண்டும் என்னும் ஆசையைத் தூண்டிவிட்டது. அவன் அந்தகன் என்று பார்க்காமல் இருந்த தடை உடைபட்டு விட்டது. தன் தாய் நாட்டில் இருக்து தன் மீது அன்பு பாராட்டி வந்து தன்னைப் புகழ்ந்து பிரபந்தம் ஒன்று பாடிக்கொண்டு வந்தவனை அவனுல் எப்படிப்பார்க்காமல் இருக்கமுடியும். மன்னன் திரையை விட்டு வெளியே வந்தான்; கவிஞனை முகக்கண்கொண்டு பார்த்தான். கவிஞன் மன்னனை அகக்கண்ணுற பார்த்தான், பரஸ்பரம் இருவரும் அன்புடையவர்கள் ஆனுர்கள். ஆனுலும் தன்னுட்டுச்சோழராணியின் மகன் என்றமித்திரபாந்தவத்தினுலே, அவன் ஈழநாட்டிலே ஓர் உயர்ந்த மன்னனுக இருக்கின்ற தன்மையினுலே, அவன்மீது நீண்ட நாட்களாக ஆயத்தம் செய்து பிரபந்தப் பாடித்தந்த கவிஞனுக்கு அவன் (அம்மன்னன்) திரை போட்டிருந்தது கொஞ்சக் குறையாகஇருந்தது. உடனே கவிஞன் தன் புலமையினுல் கனித்து யாழில் பிசைந்து,

"நரைகோட் டிளங்கன்று
நல்வளநாடு நயந்தளிப்பான்
விரையூ டுங் தார்ப்புய வெற்பீழ
மன்னனென் றேவிரும்பிக
கரையோட்ட மாக மரக்கலம்
போட்டனைக் காணவந்தேன்
திரைபோட் டிருந்தனை யோவால
சிங்க சிகாமணியே."

என்ற பாடலைப் பாடினுன்.

[இப்பாட்டைத் திரு. ஆ. மு. தமது யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறுர், இது சிங்கையாரியனைத் தான் பாடியதென்று விளங்கிக்கொண்ட பிறபேர் வழிகள் வாலசிங்க சிகாமணியே என்பதைப் பரராச சிங்க மன்னனுகிய பரராச சிங்க சிகாமணியே என்று திருத்தியிருக்கிறுர்கள். ஆசிரியர் ஜோன்யாதரதிம் தம் நூலில் நாம் காட்டியபடி மேற்கொண்டார், இது ஒரு கட்டளைக் கலித்துறைப்பா. நரைகோட்டிளங் கன்று யானைக்குட்டி; நயந் தளிப்பான் விரும்பிக் கொடுப்பான்; வாலசிங்கன் - செங்கடகநகர் அரசன்; சிகாமணி- தலையில் சூடிக்கொள்ளும் சூடாமணி; ஈழமன்னனென்கின்ருன். இந்திய மன்னரிலும் வேறுபிரித்து, யானைக் கன்றும் வளநாடும் உயர்ந்த பொருள்களாயிருந்தும அவைகளையும் தனக்குக் கொடுப்பான் என்றும், கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக்காண ஓடிவந்தேன் என்றும் திரைபோட்டிருந்தனையே என்றும் கவிஞன் அப்பாட்டில் சுட்டியது மன்னனுக்கும் தனக்கும் தாய்நாடு அச்சோழநாடாப என்னும் அக்கிழமைபற்றியென்க.]

—தொடரும்.

## தத்துவ வாதமும்......

(முதற்பக்கத் தொடர்ச்சி)

பாலிலே நெய் போலக் கரந்து நிற்கின்ருன். அவன் பட்டங் தீட்டாத இரத்தினக்கல்லிலே சோதி போல வெளிப்படாதிருக்கிருன். பக்தியென்னும் கோலை நட்டு விவேகம் என்ற கயிற்றினுல் நன்ருக இழுத்துக் கடைந்தால் தீ போலவும் நெய்போலவும், மாணிக்கத்திற் சோதி போலவும்வெளிப்படுவான். இது அப்பரடிகள் திருவாக்கு.


## அடைவு நகை ஏல விற்பனவு

—0—

யாழ்ப்பாணம் கோக்குவில் மேற்கில் அடைவு பிடிக்கும் தம்பிப்பிள்ளை பொன்னையா பிள்ளை அவர்களிடம் 5-9-60 தொடக்கம் 31-2-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப் படாதவைகளை 17-5-63 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
643. காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.
M 20 26, 3-5-63.


## நாவுக்கரசர் குருபூசை

மேற்படி குருபூசை, தெல்லிப்பழை — பாலர் ஞானோதய சபையினரால், சபைத்தலைவருடைய தலைமையில். சித்திரை மீ 7 உ (20-4-63) சனிக்கிழமை பிற்பகல் காசி விநாயகராலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

மாலை 3 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கும் சம்பந்தப்பெருமானின் திருவுருவப்படத்திற்கும் விசேட பூசைகள் நடைபெற்றன. தலைவர் நாவுக்கரசரின் பெருமைகளை எடுத்துரைத்தார். அநேக மாணவ மாணவிகளது தேவார உபந்நியாசங்களும் இடம்பெற்றன.

## உமாபதிசிவாசாரியர் குருபூசை

—0—

நாள்: சோபகிருதுஹூ சித்திரை உஉ உ (5 - 5 - 63) ஞாயிற்றுக்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

ஆரம்பம்: இரவு 7 மணி
கடவுளாராதனை,
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
விரிவுரைகள்;
'சிவப்பிரகாசம்'
சித்தாந்த பண்டிதர்,
திரு. வே. சோமசுந்தரம்
'கோடிக்கவி'
சைவப்புலவர்,
திரு. வ, கந்தசுவாமி.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மு மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.
2-5-63.


கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4189.
1. கணவதிப்பிள்ளை கைம்பெண் அன்னப்பிள்ளையும் 2 எஸ். சின்னத்தம்பியும்,
3. பெண் ராசம்மாவும்
அனைவரும் இணுவில்
-வழக்காளிகள்.
எதிராக
1. கனகரத்தினம் நவரட்ண ராசாவும்
2 பெண் நேசமலரும்
இருவரும் மானிப்பாய்
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4189-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக காணி 1963 ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந் திகதி (25-5-63) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 12, 740 இதற்கு ரூபா 10, 500-க்கு 8-8-61 தீர்வைத் திகதி தொடக்கம் ?-11-61 வரை 100 க்கு 9 வீத வட்டியும் பின், முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 345 ரூபா 47 சதமும். இதில் முதல்தொகையில் ரூபா 3000/-மும் கோட்டுச் செலவு தொகையில் ரூபா 200/- கொடுபட்டது,

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோயிற்பற்று, "குப்பக்கன் ஓடை" பரப்பு நில லாச்சம் நாலரை ($4\frac{1}{2}$) யும், வீடும், கிணறும், பயிர்களும் இதற்கு எல்லை: கிழக்கு - மேற்குறித்த எதிரிகளின் ஆதனம். வடக்கு குட்டித்தம்பி இராசையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு வயித்திலிங்கம் கைம்பெண் தங்கம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு றேட்டு இது அடங்கலும். இக் காணி E 338/75 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி
16-4-63.
M. 21 3-5-63.


இவ்வாரம் 5-5-63 — 11-5-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இளைத்தவர் நண்பரால் தொல்லைகளுண்டாம். சுகவீனம் தொடரும். வேலை அதிகமாயிருக்கும். வியாழன் மாலை வெள்ளி சனியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தடைகளைத் தாண்டிவிட மூடிபுப் ... நிச்சயம். நண்பர்கள் இடரிலிருந்து மீட்பா, வெற்றிக்காகக் கடுமையாக உழைக்க வேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3, 4, ருவாதிரை, புனர்பூசம் 1ம், 2 ப பாதம்.

செலவு அதிகமாகும். ஆனுல் போதியவருவாயுமுண்டாம். இனசனத்தால் தொல்லையும், நண்பருடன் கலகமும் உண்டாம். நண்பர்கள் மிக உதவுவர்,

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

தொழிலைப்பொறுத்தவரை உமது எண்ணப்படி நடந்துகொள்வீர். பண இலாபமும் நிச்சயம், குடும்பத் தகராறுகள் தொடரும். உடல் நிலையும் ஊறுபடும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பணமளவில் தட்டுப்பாடான வாரம். செலவுகள் பெருகும், தந்தைவழி உறவினர்மூலமான கலவரங்களுக்கு இடமுண்டு. எதிரிகளுக்கு இன்னலும் உமக்குப் புகழும் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் நல்லவாரம். தொழில் வெற்றி நிச்சயம். ஆனுல் உடல்நிலை ஊறுபடும். ஆனுல் மனநிம்மதி இருக்காது. இனத்தவர் மூலமான கலவரங்களுண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதல்கள் உண்டாம். சிறு உடல்நிலைக்குழப்பமும் ஏற்படலாம். இனத்தவருடன் சச்சரவும் குடும்பத் தகராறுகளும் உண்டாகலாம். பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணமளவில் நல்ல வாரம். உமது முயற்சிகளில் அதிக இடரின்றி வெற்றிபெறுவீர். நண்பர்கள் மிக உதவுவர்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை ஊறுபடும். இரகசிய எதிரிகள்மூலமான தொல்லை உண்டாம், சில காலத்திற்குக் கோள்சொல்வோர்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வழக்குகளுக்கு இடமுண்டு. குடும்பத்தொல்லைகள் எதிரிகள் மூலமான தொல்லைகள் உண்டாம், வயிற்றுக்கோளாறுகள் ஏற்படும். மனநிம்மதி இருக்காது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடு கழியவேண்டும். வாரமிகுதிப் பகுதி திரும்பவும் சாதகமாதம், வெற்றியும் பண இலாபமும் நிச்சயம், எதிரிகளுக்கு இன்னல் உண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலை மேலும் சில காலத்திற்குப் பிரச்சினைக்குரியதாகும். ஆனுல் தொழில் வெற்றி உண்டாம். செவ்வாய் புதன் வியாழன் காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 3 5-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம, சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org